தொகுதி-௫௫ Vol. 55

பகுதி-௰ No. 10

# செந்தமிழ்

திருவள்ளுவர்

ஆண்டு 1991

விகாரி-தை

JANUARY-1960

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

## உள்ளுறை


1. தைப்பொங்கல் 285
   ச. அகத்தியலிங்கம் M. A., B. Sc.,
2. அகத்திணைத் தெளிவு 294
   வித்துவான் வீ. ப. கா. சுந்தரம் M. A.,
3. தண்டனை! 302
   புலவர். வித்துவான், மு. உலகநாதன்
4. இருவேறு உலகத்தியற்கை 305
   புலவர், வெ. சி. சீனிவாசன்
5. நும் — நீயிர் 309
   ஆ. சிவலிங்கனார், மயிலம்
6. உலகச் சமயங்கள் 312
   கி. பழநியப்பன்
7. சங்கச் செய்திகள் 314


---

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு


1. நிர்வாக ஆசிரியர், தமிழவேள், திரு. பி. டி. இராசன். B. A., (Bar-at-Law) M. L. C.
2. திரு. சித்தாந்தகலாநிதி. பேராசிரியர். ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph. D, சென்னை.
4. திரு. பேராசிரியர், பி, சோதிமுத்து. M. A. B, D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு வீ. சண்முகசுந்தரம் M. A B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.
7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்
8. வித்துவான், திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

3582

உ

கடவுள் துணை

# செந்தமிழ்

| | | |
|---|---|---|
| தொகுதி. ருரு<br>Vol. 55 | திருவள்ளுவர் ஆண்டு 1991<br>விகாரி—தை<br>1960—January | பகுதி. ௰<br>No. 10. |


## தைப்பொங்கல்*

ச. அகத்தியலிங்கம் M. A. B. Sc.
ஆராய்ச்சி மாணவர்
கேரளாப்பல்கலைக் கழகம்.

தைத்திங்களின் தலைநாள் இன்று பொங்கற் புது நாளாகத் தமிழகம் முழுவதிலும் கொண்டாடப்படுகிறது. பண்ணைகளிலும் செந்நெற்கழனிகளிலும் பாடுபடும் பாட்டாளிமகன் பயன்பெறு நாளாக இன்று அது மதிக்கப்படுகிறது. ஆறு மாத காலமாக வருந்தி உழைத்து அவ்வுழைப்பின் பயனைக்காணும்போது எந்த உழவனின் உள்ளம் தான் உவகையால் பூரித்து நிற்காது? கார்த்திகை மார்கழித்திங்களில் கடன் பட்டு நிற்கும் உழவன் தைத் திங்களின் வருகைக்காகத்தவம் கிடக்கிறான். இதனை இன்று தமிழகக் கிராமப் புறங்களில் நன்கு காணமுடியும். "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்று ஏங்கிக்கிடக்கும் ஏழை உழவனுக்கு ஒரு சிறந்த நாளாக இது மதிக்கப் படுவதில் வியப்பில்லையல்லவா? "ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை சாதியில்" என்ற பாரதியின் வாக்கிற்கேற்ப இப்பொங்கற் புதுநாள் தமிழகம் முழுவதிலும் கொண்டாடப்படுகிறது.

* குலசேகரன் புதூர் அரசினர் ஆதாரப் பள்ளியில் "பொங்கல் விழா" பற்றிப் பேசியதன் சுருக்கம்,

### தைத்திங்களும் தமிழிலக்கியமும்

இத்தகைய சிறந்த தைத்திங்கள் பற்றிய கருத்துக்களைப் பண்டைத்தமிழிலக்கியப் பூங்காவினுள் பரக்கக்காணலாம். சங்ககால இலக்கியங்கள் என்று கூறப்படும் நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பரிபாடல் போன்ற நூற்களில் தைத்திங்களைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

### தைத்திங்களின் தண்மை

தைத்திங்களின் தண்மை, தைத்திங்களில் தமிழகக்குளங்களின் நீரின் நிறைவு போன்ற செய்திகள் நன்கு காணப்படுகின்றன. "தைப்பனி தரையைத் துளைக்கும்" என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. பனியின் தண்மையும் நீரின் தண்மையும் கலந்து விடும் போது தைத்திங்கள் தண்மை நிறைந்ததாகக் காணப்படுகிறது. பண்டைக்காலத்தில் தைத் திங்களில் நீர் நிலைகள் நிறைந்து காணப்பட்டன. கொள்ளக் கொள்ளக் குறைவுபடாத அளவுக்கு நீர் நிலைகள் நிரம்பிக்கிடந்தன. இதனைச் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடும் போது கோவூர்கிழார் மிக அருமையாகக் குறிப்பிடுகிறார். அவனுடைய நகர் கொள்ளக் கொள்ள குறைவு படாத சோற்றையுடையது என்று கூறப் போந்த அவர்,

"தைஇத் திங்கள் தண்கயம் போலக்
கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்"

என்று கூறி நிற்கிறார். தைத்திங்களில் தண்ணீரின் தண்மையும் அதன் நிறைவும் இவண் நன்கு பேசப் படுகின்றன.

இதே போன்று குறுந்தொகையிலும் ஒரு பாடல் காணப்படுகிறது. தலைவியைப் பிரிந்து பரத்தை இல்லில் வாழ்ந்தான் தலைவன் ஒருவன். தலைவனைப் பிரிந்த தலைவி சாம்பினாள். சின்னாள் கழித்துத் தலைவன் திரும்பினான். தலைவியோ அவனை ஏற்பாளாக இல்லை. இதனைக் கண்ட தலைவன் தோழியிடம் சென்று வாயில் வேண்டினான்,

ஆனால் தோழியோ அவனுடைய பழைய நிலையையும் இன்றைய நிலையையும் எடுத்துக்காட்டி இடித்துக் கூறினாள். அன்று களவுக் காலத்தில் தலைவி வேப்பங்காயைத் தந்தாலும் வாயிலிட்டுச் சுவைத்து இனிக்கிறது, இனிக்கிறது என்று கூறும் நிலையில் இருந்தாய், இன்றோ பாரியினுடைய பறம்பு மலையின் கண் உள்ள சுனையில் காணப்படும் **தைத்திங்கள் தண்ணீரைத்** தரினும் உனக்குக்கசப்பாக இருக்கிறது'' என்று கூறி அவன் மன நிலையை உணர்த்துகிறாள். இவண் மிக இனிதான பொருளாகக் கூறுவது தைத்திங்கள் தண்ணீராகும். இதோ பாடல். சுவையுங்கள்.

> "வேம்பின் பைங்கா யென்றோழி தரினே
> தேம்பூங் கட்டி யென்றனி ரினியே
> பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
> தைஇத் திங்கட் டண்ணிய தரினும்
> வெய்ய வுவர்க்கு மென்றனிர்
> ஐய வற்றா லன்பின் பாலே" [குறு. 196]

தைந்நீராடல்

இன்று தைத்திங்களின் முதல் நாளைப் பொங்கல் புது நாளாகக் கொண்டாடுகிறோம். அன்று தமிழகப் பெண்கள் நோன்பு நாளாகக் கொண்டாடினர். தங்கள் மனங் கவர்ந்த மணாளனைப்பெற நோன்பு செய்யும் நாளாகக் கொண்டிருந்தனர். தைத்திங்கள் முழுவதிலுமே பெண்கள் குறிப்பாக மணமாகாத கன்னிப் பெண்கள் ஆறுகளிலும் குளங்களிலும் பிறநீர்நிலைகளிலும் சென்று நீராடி வந்தனர். இதனைத் தமிழிலக்கியங்கள் தைந்நீராடல் என்றழைக்கின்றன. பரிபாடல் என்னும் நூலின்கண் வையையைப் பற்றிய பாடல் ஒன்றில் இச்செய்தி மிகவிரிவாகப் பேசப்படுகிறது. வையையில் சென்று பெண்கள், இப்போது வையையே நாங்கள் நீராடும்படியாகத் தெளிந்து வருகின்றாய் என்றும் எம் காதலரைத் தழுவும் வீறு பெறுக என்றும் பூவில் விழும் வண்டு பின்னர் அப்பூவை நீங்கித் தனியே விட்டுப் போவதுபோல் போகாமல் எம்மால் விரும்பப்படும் கணவர் எம்மைப் பாது

காப்பாராக வென்றும் எம் கணவரும் யாமும் கிழவர் கிழவியர் எனப்படாமல் இத்தவம் நிலைபெற்ற இளமையைத் தரச் செல்வத்தோடும் சுற்றத்தோடும் நிலைபெறுக'' வென்றும் பலவாருகக்கூறி நீராடுகின்ற செய்தி,

நீ தக்காய் தைந்நீர் நிறந்தெளிந்தா யென்மாரும்
கழுத்தமை ஸ்கவாங்காக் காதலர் புல்ல
விழுத்தகை பெறுகென வேண்டுது மென்பாரும்
பூவீ ழரியிற் புலம்பப் போகா
தியாம்வீழ்வா ரேம மெய்துக வென்பாரும்
கிழவர் கிழவிய ரெண்ணுதேழ் காறும்
மழவீன்று மல்லற் கேண்மன்னுக வென்பாரும்
.......................................
இன்ன பண்பினின் றைந்நீராடல்

என்ற பரிபாடல் அடிகளில் பேசப்படுகிறது.

இது போன்று தைத்திங்கள் நோன்பு இயற்றிக் காதலனையடையும் செய்தியை நற்றிணையும் கலித்தொகையும் நன்கு காட்டுகின்றன. ஒரு தலைவன் தோழியிடம் சென்று குறையிரக்கிருன். தோழி மறுக்கிருள். தலைவனே விடுவதாக இல்லை. "நான் வாழவேண்டுமாயின் எனக்கு இக் காதல் துன்பத்தைத் தந்த அவளேதான் மருந்தாகவேண்டும். அவளும் என்னை விரும்பி தைத்திங்களில் நீராடுகின்ருள். எனவே, அவள் மறுக்கமாட்டாள்'' என்று தோழிக்குக் கேட்கும்படியாகத் தன் நெஞ்சுக்குக் கூறுகின்ருன்.

தழையும் தாரும் தந்தனன் இவனென
இழையணி ஆயமொடு தகுநாண் தடைஇத்
தைத்திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோள் குறுமகன் அல்லது
மருந்து பிறிதில்லையான் உற்றநோய்க்கே. [நற். 80]

என்பன அப்பாடலின் அடிகள். தான் காதல் கொண்ட காதலன் தனக்குக் கிடைக்க நாணத்தோடு அவள் நீராடுகின்ருள். உரைகாரரும், "நோன்பின் பயனெய்துத் தைத் திங்கள் முழுவதும் வைகறையினீராடுதலாம்'' என்று கூறுவது காணத்தக்கது. இக்கருத்தைக் கலித்தொகையும்,

"தையில் நீராடிய தவந்தலைப்படுவாயோ'' என்ற அடியில் (59) காட்டாகிற்கிறது.

தை ஊண்

இவ்வாறு நோன்பு நோற்கும் தலைவியர் நீராடிப்பின்னர் சமைத்து உண்பர். இந்நிகழ்ச்சியை நற்றிணை 22ஆம் பாடலில்,

"புறந்த நோன்பியர்
தையூணிருக்கையில் தோன்று நாடன்"

என்றவடிகளில் காணலாம்.

இத்தகைய தைந்நீராடல் மிகப்பெருவழக்காகத் தமிழகத்தில் இருந்து வந்தது. ஊரின் கண்ணுள்ள நீர்நிலைகளில் பல பெண்கள் சென்று நீராடினர். இதனை ஐங்குறுநூற்றுப்பாடல் ஒன்று குறிப்பிடுகிறது. தலைவன் ஒருவன் தலைவியை விட்டுப் பிரிந்து பரத்தையர்பால் சென்றான். பின்னர் தோழிபால் வந்து வாயில் வேண்டினான். இவ்வாறு வாயில் வேண்டிவந்த தலைமகற்குத் தோழி,

செவியிற் கேட்பினுஞ் சொல்லிறந்து வெகுள்வோள்
கண்ணிற் காணி னென்னா குவள்கொல்
நறுவீ யைம்பான் மகளி ரொடும்
தைஇத் தண்கயம் கோலப்
பலர்படிந் துண்ணு நின்பரத்தை மார்பே.

என்று கூறுகிறாள். இவண் பல பரத்தையர் படிந்துண்ட அவன் மார்புக்கு ஆசிரியர் தைத்தண்கயத்தை உவமை கூறுகிறார். "பல பெண்கள் தைத்திங்களில் நீராடும் குளத்தைப் போன்று பல பெண்கள் படிந்த மார்பு" என்ற கூற்றில் இச்செய்தி காணப்படுகிறது.

எனவே, இதுகாறும் கூறியவற்றால் தைத்திங்கள் பண்டைக்காலம் தொட்டே மிகச்சிறப்புடையதாகக் கருதப்பட்டு வந்துள்ளது என்பதும் தைத்திங்களின் தலைநாள் மிகத்தூய்மையான நாளாகக் கருதப்பட்டுள்ளது என்பதும் நன்கு விளங்கும். பல்வேறு இலக்கியங்களில் பேசப்பட்டுள்ள இத்தைத்திங்களும் அதன் தலைநாளும் இன்றும் தமிழக மக்களால் கொண்டாடப்பட்டு வருகின்றன, அன்று மாதர்களின் நாளாகக் கொண்டாடப்பட்ட இந்நாள் இன்று

பொங்கற் புதுநாளாகப் பொலிவு பெற்றுள்ளது. உழவர்களின் திருநாளாக இன்று தமிழக ஊரெங்கும் கொண்டாடப்படுகிறது.

**உழவர் திருநாள்**

அண்மைக் காலம்வரை ஒரு சிலரால் மட்டும் கொண்டாடப்பட்டு வந்துள்ள இப்பொங்கல் நாள் தமிழ்ப் பெரும் புலவர். பண்டித. கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் தமிழர்களின் பொதுவிழாவாக, ஒரு தேசியத் திருவிழாவாக உருவெடுத்துள்ளது. நாட்டின் முதுகெலும்பாம் உழவர்களின் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

**உழவும் தமிழிலக்கியமும்**

உழவர்களையும் உழவுத் தொழிலையும் பற்றிக் கூறாத இலக்கியங்களே இல்லை என்று கூறலாம். உலகில் காணப்படும் எல்லா மொழி இலக்கியங்களும் உழவரைப் பற்றிக்கூறும். வாழ்வினின்றும் உழவுத் தொழிலையோ அல்லது உழவரையோ பிரிக்கமுடியாதல்லவா? இலக்கியம் வாழ்க்கையின் கண்ணாடி அல்லது திறனாய்வுதானே? எனவேதான் எல்லா மொழி இலக்கியங்களும் இத்தொழில் பற்றிக் கூறுகின்றன. அந்நிலைக்கு தமிழ் இலக்கியங்கள் விதி விலக்கில்லை யல்லவா?

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்தோன்றியவை என்று கருதப்படும் சங்க கால இலக்கியங்கள் முதல் இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்கள் வரை உழவையும் உழவரையும் பற்றிக் கூறுகின்றன. ஆனால் அவை கூறும் போக்கில் சிற்சில மாற்றங்களைக் காணமுடியும். ஆனால் பொதுவாக நோக்குமிடத்து இத்தொழில் மிகச்சிறந்ததாகக் கருதப்பட்டு வந்தமை நன்கு புலனாகும். மதுரைக்காஞ்சியில் இத்தொழில் மிகச்சிறந்ததாகக் கருதப்படுகிறது.

..................மீக்கூறும்
வியன்மேவல் விழுச்செல்வத்
திருவகையா னிசைசான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர் [119—22]

என்ற வடிகளில் இக்கருத்து காணப்படுகிறது.

மேலும், வெள்ளைக்குடி நாகனார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்றில் உழவர்களின் இன்றியமையாமையும் அவர்களைக் காத்தால் அரசன் அடையும் நன்மையும் நன்கு காட்டப்படுகின்றன.

"வருபடை தாங்கிப் பெயர்ப்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கி னீன்றதன் பயனே"

"பகடுபுறந் தருநர் பார மோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
அடிபுறந் தருகுவ ரடங்கா தோரே" [புறம் 20]

தனிப்பாடல்திரட்டின்கண் கல்வியில் பெரியனாகிய கம்பன் பாடியதாகக் காணப்படும் பாடல் ஒன்றில் "ஏர் பிடிக்கும் கையை வேந்தர்கள் எதிர்நோக்கியிருக்கின்றனர்" என்றும் "அக்கை அருளும் கை" என்றும் "நாட்டையே பல்லூழி காலங்கட்குப் பாதுகாக்கும் கை" என்றும் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

"மேழி பிடிக்குங்கை வேல்வேந்தர் நோக்குங்கை
ஆழி தரித்தே யருளுங்கை—சூழ்வினையை
நீக்குங்கை யென்று நிலைக்குங்கை நீடூழி
காக்குங்கை காராளர் கை"

என்பதே அப்பாடல். கல்வியில் பெரியவனல்லவா? அதிலும் "ஏர் எழுபது" என்ற நூலை இயற்றி உழவின் பெருமையை உயர்த்தினவனல்லவா?

## உழவும் வள்ளுவரும்

தமிழ்நாடு செய்த தவப்பயனாய் நம் நாட்டில் பிறந்தவர் வள்ளுவர். அவர் கூறாத பொருளில்லை. பேசாத செய்தியில்லை. எல்லாப் பொருள் பற்றியும் பேசிய செந்நாப்புலவர் அவர். இதனால் அன்றோ

"எல்லாப் பொருளும் இதன்பா லுளஇதன்பால்
இல்லாத எப்பொருளு மில்லை..."

என்று குறள் போற்றப்படுகிறது. இத்தகைய புலவர் பெருமான் "உழவு" என்னும் அதிகாரம் ஒன்றையே வகுத்துப் பத்துக் குறட்பாக்களில் அதன் சிறப்பு, உழவர் சிறப்பு போன்றவற்றைக் கூறியதில் வியப்பில்லை. பத்துப் பாக்களில் பலரும் பாடாத அளவில் பலவாறாகப் பாடிய பண்பைப் படிப்போர் உணரமுடியும்.

## பள்ளு இலக்கியங்கள்

இவ்வாறு இலக்கியங்களில் பலவாறாகப் பேசப்பட்ட உழவுத்தொழிலும் உழவர்களும் பிற்கால இலக்கியங்களில் நன்கு போற்றப்பட்டனர். பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் உழவுத் தொழிலையும் உழவர்களையும் பற்றித் தனி நூற்களே தோன்றின. உழவுத் தொழில் செய்யும் பள்ளர்கள் இவ்விலக்கியத்தின் தலைவர்களாய் விளங்குவதைக் காணலாம். நாட்டுப்புற மொழியில் அவர்களிடையே நடக்கும் பல செய்திகளைக் கூறுவனவாக அமைந்துள்ளன இவைகள். எனவே இலக்கியங்களில் ஒன்று இரண்டு இடங்களில் பேசப்பட்ட இத் தொழிலும் உழவர்களும் இலக்கியத்தின் நடுநாயகமான நிலைக்கு உயர்த்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

## தற்காலம்

ஆனால், தற்காலத்தில் உழவுத் தொழில் சிறப்பாகக் கருதப்படுவதோடு மட்டுமன்றி வந்தனைக் குரியதாகவும் கருதப்படுகிறது. இதனாலன்றோ தேசியக்கவிஞர் பாரதியார்,

> உழவுக்கும் தொழிலுக்கும்
> வந்தனை செய்வோம்—வீணில்
> உண்டுகளித் திருப்போரை
> நிந்தனை செய்வோம்

என்று உழவுத்தொழிலுக்கு வந்தனை புரிகின்றார். நன்செயும் புன்செயும் கொஞ்சி மகிழும் நாஞ்சில் தந்த கவிஞர். கவிமணியும்,

> "நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
> தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும் செழுங்கருணை
> ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்துநடம்
> ஆடிக்களிக்கும் மயிலே! உன்பாதம் அடைக்கலமே"

என்று பாடுகின்ற பாடலின்கண் உழுவார் கரத்தை முத லில் வைத்து வணக்கம் செய்கிறார். இதே போன்று நோபல் பரிசு பெற்ற பெரும்புலவராம் இரவீந்திரநாத தாகூர் அவர்களும் "கடினமான தரையில் ஏர் கட்டி உழுவாரிடமும் சாலை அமைக்க சரளைக்கல் உடைப்பா ரிடமும் கடவுள் இருக்கிறார்" என்று கூறிப்போந்தார். இவ்வாறு பல்வேறு படிகளில் வளர்ந்து வந்த உழவுத் தொழிலும் உழவர்களும் இருபதாம் நூற்றாண்டில் வணக் கத்திற்குரியராக மதிக்கப்படுவதிலும் அவர்கட்கென விழா வெடுப்பதிலும் வியப்பில்லை.

## சமயப் பொறுமை

பொங்கற் புதுவிழா இன்று எல்லா சமயத்தாராலும் கொண்டாடப்படுகிறது. சாதிமத பேதமில்லாமல் நாடு நகரம் எங்கணும் கொண்டாடப்படுகிறது. தமிழ் மக்கள் சமயப் பொறுமை வாய்ந்தவர்கள். இதனைத் தமிழ் இலக் கிய வரலாறும் தமிழ் நாட்டு வரலாறும் நன்கு காட்டும். சிற்சில நேரங்களில் சமயப் பொறுமையை யிழந்து தமிழ் மக்கள் நிறைகுன்றியபோதிலும் பிற நாட்டாரை நோக்க, பிற மொழியாளர்களுடன் ஒப்பிடும்போது இவ்வுண்மை நன்கு விளங்கும். இதற்கு ஒரு சிறந்த சான்றாக இன்று பொங்கல் விழா விளங்குகிறது. தமிழன் என்ற அடிப் படையில் இது இன்று கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழா தமிழரின் இப்பொறுமையை மேலும் மேலும் வளர்க்கும் பெற்றியதாக அமையட்டும்.

# அகத்திணைத் தெளிவு

# மலரின் பெயரா நிலங்கட்கு?

(வித்துவான் வீ. ப. கா. சுந்தரம் M. A. மதுரை.)

(தொடர்ச்சி 264)

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று எவ்வாறு பெயர் பெற்றன? இப்பெயர்களின் அமைப்புகட்குக் காரணம் இருசாரார் இருவாறு கூறுகின்றனர். இளம்பூரண அடிகள், தம் உரையில், குறிஞ்சி முதலிய பூக்களின் சிறப்புப்பற்றியே குறிஞ்சி முதலிய நிலங்கட்குப் பெயர் குறியிட்டாளப்பட்டன என்று கூறியுள்ளனர்; ஒவ்வொரு நிலத்திற்கும் ஒருபூ மிகச்சிறந்து காணப்பட்டமையால் அப்பூவினடியாக ஏகதேச காரணம் பற்றி முதலாசிரியர் இட்டதோர்குறி என்று விளக்கியுள்ளனர்; அதாவது பூவின் பெயர் நிலத்திற்காயிற்று என்பதே அவர் கருத்து.

ஆனால் களவியலுரைகாரரும் நச்சினார்க்கினியரும் குறிஞ்சி முதலிய ஒழுக்கங்களின் பெயர்கள் அவ்வொழுக்கம் நிகழும் குறிஞ்சி முதலிய நிலங்கட்கு ஆகிவந்தன என்பர்.

இவ்விருசாரார் கூற்றுக்களிலே, களவியலுரைகாரரும் நச்சினார்க்கினியரும் கூறியதே மிகப்பொருத்தமுடையதாக விளங்குகின்றது. இதற்குரிய காரணங்களைத் தொகுத்துக் காண்போம்.

குறிஞ்சி என்பது முதலில் புணர்தல் ஒழுக்கத்தைக் குறித்தது, பின்னர் மலை நிலத்தைக் குறித்தது. ,"ஒழுக்கமே திணை எனப்படும்; குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது. என்னை? "விளக்காகிய சுடர் இருந்த இடமும் விளக்கு எனப்பட்டது போன்று" என்று இறையனார் அகப்பொருள் உரைகாரர் தெளிவுறுத்துகின்றார்., எனவே குறிஞ்சி என்பது முதற்பொருள்பட்டு புணர்தலொழுக்கத்தையும் வழிப்பொருள்பட்டு ஆகுபெயராகிய மலைநிலத்தையும் உணர்த்திற்று,

குறிஞ்சி ஒழுக்கம் என்னும் முதற் பொருளின் தொடர்பு பற்றியே, குறிஞ்சி நிலம் எனவும் குறிஞ்சிச் செடி எனவும் குறிஞ்சிப் பண் எனவும் வழிப் பெயர்கள் தோன்றின.

தொல்காப்பியரே குறிஞ்சி முதலிய சொற்கள் தொழிற் பெயர்கள் எனச் சுட்டியுள்ளனர். உரிப்பொருள் என்பது ஒழுக்கத்திற்குரிய பொருள் எனக்கொள்ளல் வேண்டும்.

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றி னிமித்த மென்றிவை
தேருங்காலை திணைக்குரிப் பொருளே

என்ற அகத்திணை (16) நூற்பாவால் இதனை யறியலாகும். இங்குக் குறிஞ்சித் திணை என்பது புணர்தல் ஒழுக்கம் எனத் தெளிவாகக் கூறிவிட்டார். இனித் தொல்காப்பியர் மலைநிலத்தையும் குறிஞ்சி எனக் குறித்துள்ளார். ஆனால் மலைநிலம் என்பது வழிப்பொருளாகக் கொள்ளல் வேண்டும்.

சேயோன் மேய மைவரை யுலகம்.....
குறிஞ்சி எனச் சொல்லவும் படுமே.

என்பதவர் நூற்பா. இங்கே சொல்லவும் படுமே என்று உம்மை கொடுத்துக்கூறினர். ஒழுக்கமாகவே குறிஞ்சியைக் கொள்ளல் வேண்டும். ஆனால் தொடர்புபற்றி நிலமாகச் சொல்லவும் படலாம் என்பதைக் காட்டவே உம்மையால் கூறினர்.

இனி வேர்ப்பொருள் கொண்டு குறிஞ்சி என்பது தொழிற் பெயர் என நிறுவலாம். தழுவுதல் தழிஞ்சியாகும். "அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு" (தொல். புறத். 8) என்பதில் தழிஞ்சி தழுவுதல் பொருட்டது என்று நச்சினார்க்கினியரே விளக்கியுள்ளார். எனவே, குறிஞ்சி குறுகுதல் பொருட்டது. கொழிஞ்சி என்பது ஒருவகை உரத்தழை: கொழுமையை (வளப்பத்தை) ஊட்டுவது கொழிஞ்சி. நெரித்தல்—குத்தல், நெரித்தற்பொருட்டது நெரிஞ்சி. எனவே குறுகுவது குறிஞ்சி. குறுகுதல், நெருங்குதல்,

அணைதல், சேர்தல். இணைதல் என்பன ஒரு பொருட்படு வன. தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் கண்டு களித்து நெருங்கி உள்ளம் ஒன்றுவதால் குறுகுதல் எனும் பொருள்பட்டுக் குறிஞ்சிப்பெயர் அமைந்தது. எனவே இதுதொழில்பற்றிய காரணக் குறியீட்டுச் சொல்; உள்ளத்தால் உடலால் இணைதல் (குறுகுதல்) குறிஞ்சி. இது போன்றே, முல்லை, மருதம் முதலிய சொற்களின் வேர்ப்பொருள் காணின், இவை தொழிற் பெயர்கள் எனவும் முதலில் ஒழுக்கம் குறித்தன எனவும் அறியலாகும்.

பூவின் பெயர் நிலத்திற்காயிற்று; பின்னர் அதுவே நிலத்திற் காயிற்று என்ற கருத்தே பெரும்பாலும் வலு வுற்று நிலவி வருகிறது. ஆயினும் தொல்காப்பியத்தில் அதற்கேற்ற அகச்சான்றுகள் இல்லை. உலகில் நடை முறையிலும் இவ்வாறு பெயர்கள் அமைவதில்லை. மேலை நாட்டார் ஒருவரை ஒருவர் பிரியுங்கால் "Forget me not" எனச்சொல்லிப் பிரிவது வழக்கமாயிருந்தது. பின்னர் இச்சொற்களைத் தெரிவிக்கக் குறியீடாக ஒரு பூவை வழங் கினர். அப்பூவிற்கு "Forget me not" எனப்பெயரிட்டனர். மேலைநாட்டார் கற்பு ஒழுக்கத்தைக் குறிக்க லில்லி மலரைப் பயன்படுத்தினர். இயேசு பெருமானின் இனிய அன்னை யாரின் தூய கற்பை அறிவிக்க, அவரது திருக்கரத்தில் லில்லிமலர் வைத்திருப்பதை ஓவியத்தில் காணலாம். மேலும் உலகில் பல செயல்கட்கு அடையாளங்களை அமைத்துக் கொள்ளும் பழக்கம் பண்டும் இன்றும் உண்டு. உரிமைக் கட்சி (காங்கிரஸ்) தோன்றிச் சற்று வளர்ந்த நிலையிலே அதற்கு அடையாளமாக ஒரு கொடியை அமைத்தனர். இங்குக் காட்டிய எடுத்துக்காட்டுகளால் செயல் முந்தியது; அதனைக் குறிக்கும் குறியீடு பிந்தியது என்பதை உணரலாம். இயற்கையால் அகத்தில் மூண் டெழும் உணர்வுபற்றிய காதற் செயல்களைப் பாகுபடுத்திப் புலவர்கள் பெயரிட்டனர். பின்னர் அக்காதற் செயல்கள்

நிகழ்வதற்கேற்ற நிலங்களை அறிந்து, அந்நிலங்களையும் அச்செயல் பெயராலேயே குறித்தனர். பின்னர் அந்நிலத்தில் காணப்பட்ட சிறந்த மலரைச் சீரிய அடையாளக் கருப்பொருளாக அமைத்தனர். மலருக்கும் ஒழுக்கத்தின் பெயரையே யிட்டனர். எனவே குறிஞ்சி என்ற ஒழுக்கத்தின் பெயரே, குறிஞ்சி நிலத்திற்கும் குறிஞ்சி மலர்க்கும் ஆயிற்று எனலே பொருத்தமாகும்.

நீங்கள் கேட்கலாம், சர்ச்சில் முதலமைச்சர் போர் வெற்றியடையா முன்னரே (V. for Victory) 'V' என்ற குறியை அமைத்துக்கொண்டாரே என்று. கலந்தாலோசித்துப் போர் நிகழ்ச்சிகளை ஆர அமர வகுத்து நடத்துகையில், இவ்வாறு குறியீடுகளை முன்னரே அமைத்துக் கொள்ளலாம். ஆனால் காதற் சொற்கள் உள்ளம் கவர்ந்தோங்குவன; உணர்ச்சியால், எழுச்சியால், இயற்கையால் நிகழ்வன. அச்செயல்கட்கு முதலிலேயே பெயரிட்டனர்; பின்னர் குறி கற்பித்தனர்: கருப்பொருட்கள், புலவர்கள் அமைத்துக் கொண்டனவே.

குறுகுதல் குறிஞ்சி எனப்பொருள் கூறுவது பொருந்தும். குறிஞ்சிப்பூவிற்குக் குறிஞ்சி எனப்பெயர் வர ஏற்ற காரணம் எவரும் கூறாமையானும் குறிஞ்சித் திணைப் பெயர் தொழில்பற்றி அமைந்த காரணப் பெயராயிருப்பதாலும் திணையின் பெயரே பூவிற்காயிற்று எனல் ஏற்றுக் கொள்ளற்குரியது. இனி முல்லை முதலிய தொழிற் பெயர்களின் வேர்ப்பொருளைக் காண்போம்.

## முல்லை

புறப்பொருள்வெண்பாமாலையுள் முல்லை என்பதற்கு இயல்பு மிகுதி எனப்பொருள் கூறப்பட்டுள்ளது. அரச முல்லை என்ற வெண்பாமாலைத் துறையானது பகைவரை வெல்லுதல், மக்களைக் காத்தல் ஆகிய இயல்புகள் அரசனிடம் மிகுதியாகி வளர்ந்தோங்குவதை விளக்குகிறது. கல்—கலை, தொல்—தொலை, கொல்—கொலை என்றாயது

போன்று, முல்—முலை என்றாயிற்று. பெண்ணின் அழகு. உயர்வு, இயல்புகளை மிகுதிப்படுத்தும் உறுப்பாதலால் முலை எனப்பெயரிட்டனர். முலையிலாள் பெண் காமுற் றற்று என்ற வள்ளுவர் வரியும் இதனை வற்புறுத்தும்.

எனவே, 'முல்' என்பதே வேர்ச்சொல். பெருங் கதையில் முல் எனும் சொல்லடியாக, முல்லான் என்று சொல்லாக்கியுள்ளதைக் காணலாம்.

அகப்பொருளிலே முல்லை என்பது அன்பு, கற்பு முதிர்ந்து மிகுதிப்பட்டிருத்தல் எனப்பொருள்படும். முல்லைத் திணை இல்லறத்தின் தனிப்பெருஞ் சிறப்பை எடுத்துக்காட்டுவதாகும். மணமக்கள் பிரிவால் உளதாகும் வருத்தத்தைத் தாங்கி, ஒருவரை ஒருவர் நினைத்து ஏங்கி, அன்பு மிகுதிப்பட்டிருத்தலும், அதன் நிமித்தமும் முல்லை யாகும்.

கார் காலம் வர, மனதைக்கவரும் மணிகள் ஒலிக்க, நனி துன்பந்தரும் பனி பொழிய, கொன்றையந் தீங்குழல் மன்றுதோறும் இயங்க, மல்லிகை, முல்லை மலர்கள் மாண்புடன் விளங்கக் காதல் உணர்வுகளும் நினைவுகளும் மிகுதியாவதால் முல்லை யாயிற்று.

கணவனும் மனைவியும் இனிது இல்லறம் நடத்துவதை செவிலித்தாய் சென்று கண்டுவந்து, தலைவியின் கற்பின் மிகுதியைப் புகழ்தலும் முல்லையே.

எனவே முல்லை என்பது இயல்பு மிகுதியாகி இருத்தல் என்ற ஒழுக்கத்தைக் குறிக்கும். "முல்லை சான்ற முல்லை யம்புறவு" என்ற (சிறுபாண் 169) வரி, **முல்லை ஒழுக்க** மிகுந்த முல்லையம் புறவு என்று பொருள் கூறியுள்ளதை யும் காண்க. முல்லை மலர் நிறைந்த முல்லை எனவும் பொருள் கொள்ளலாமாயினும் ஒழுக்கம் எனக் கொள் ளலே சிறப்பு.

### மருதம்

மருவுவது மருதமாகும். மருவுதல் என்பது கலத்தல், கிட்டுதல், தழுவுதல் எனும் பொருட்டது. இப்பொருளை நடைமுறைச் சொற்களாலும் அறியலாம், மருமகன் = வீட்டில் புதிதாக வந்து கலந்த மகன். பத்துப்பாட்டிலே இப்பொருள்பட்டு நிற்கும் சொற்களைக் காண்போம்; மருவரல் = சேர்தல், மருவல் = கிட்டுதல், மருவழி = மருவின இடம், (பாலைக்கலி 27ஆம் செய்யுளில்) மருவூட்டுதல் = மருவுதலை உணர்த்தல், மருவலர் = தம்மைத் தழுவாதவர், அதாவது பகைவர்: எனவே இச்சொற்களின் மூல வேர்ச்சொல் 'மரு' என்பதே. மரு + து + அம் = மருதம், "மருதம் சான்ற மருதத்தண்பணை" என்ற மதுரைக் காஞ்சி (100) வரியிலே, "மருதம் என்பது ஊடியும் கூடியும் போகம் நுகர்தல்" என்று நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டுவதும் இங்குக் காணற்குரியது.

ஊடல் என்பது பிரிவுமன்று; புணர்தலுமன்று; பிரிவுக்கும் புணர்வுக்கும் இடைப்பட்ட நிலை. தலைவியின் அன்பைப்பெற அவளைக் கிட்டுகின்ற (மருவுகின்ற) நிலை. அவளது பிணக்கைத் தவிர்க்க அவளண்டை மருவி (சார்ந்து) நிற்கும் நிலையே மருதம்.

### நெய்தல்

நெய்தல் என்பது உருகுதல். உழுதல், அழுதல், என்பன போலத் 'தல்' விகுதிபெற்ற தொழிற் பெயராக நெய்தலையும் கொள்ளல் வேண்டும். பிழிந்தெடுத்த நீர்த் தன்மையுடைய இளகு பொருளை நெய் என்று பண்டையோர் வழங்கினர். உருகுதலால் வரும் பொருள் நெய் என்று இன்றும் பொருள்படுகிறது. நெய் எனும் சொல்லுடன் பொருள் தொடர்புபட்ட சொற்களே, நை, நெய், நோய் எனும் சொற்கள். உருக்கம் என்பதும் இரக்கம் என்பதும் ஒன்றே. எனவே இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தலாகும். நெய்தற்பறை என்பது இரங்கற்பறை எனப் பொருள்படுவதால், நெய்தல் இரங்கலாகும்.

## பாலை

பாலை என்பது பிரிவு. பாலையில் பால் என்பதே வேர்ச் சொல். பால் என்றால் பகுப்பு, பிரிவு எனப்பொருள்படும். ஆண்பால், பெண்பால் என்ற சொல்லதிகாரச் சொற்கள் ஆண்பிரிவு, பெண்பிரிவு என்று பொருள்படுவன. ஆவின் 'பால்' இரத்தத்தினின்றும் பிரிந்தமையால் 'பால்' என்றாயிற்று. அப்பூதியடிகளாரின் மூத்த திருமகன் நாகந்தீண்டி இறந்தபோது திருநாவுக்கரசு நாயனார் பாம்பின் விடத்தை நீங்கும்படிச் செய்தார். சேக்கிழார் "பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்றுவித்தார்" எனப்பாடினார். இங்குப் 'பால்' என்ற சொல்லைச் சேக்கிழார் வினைச் சொல்லாகப் பயன்படுத்தியுள்ளார். விடம் பாற்றுவித்தார் என்பது நஞ்சைப் பிரியும்படிச் செய்தார் எனும் பொருள் கொண்டது. செல்வம் தேடுதல் முதலிய காரணமாகத் தலைவன் பிரிவது பாலைத்திணையாயிற்று.

குறிஞ்சி எனும் சொல் புணர்தல் என்று பொருள் பட்டுத் தொழில் குறித்துப் பின்னர் நிலத்திற்காயிற்று. புணர்தல் ஒழுக்கம் நிகழ்வதற்கேற்ற தனிச்சூழ்நிலையும் அமைதியிடங்களும் இயற்கைக் காட்சிகளும் மிக்கு விளங்குவதால் மலைநிலத்தைப் புணர்தல் ஒழுக்கம் நிகழ மிக்க ஏற்புடைய நிலமாக நாடக வழக்கிலும் செய்யுட் சித்திர வழக்கிலும் அமைத்துக் கொண்டார்கள். மலைநிலத்தில் தான் புணர்தல் வேண்டும் எனும் நியதியில்லை. புணர்தற்கு எல்லா நிலமக்களும் மலை நிலம் வருவதும் இல்லை. எல்லாவித நிலங்களிலும் எல்லாவித அகப்பொருட் செயல்களும் நிகழும். என்வே புணர்தல் எனும் பொருட்டாய சொல், புணர ஏற்புடைய சிறப்பு நிலத்திற்கு ஆகு பெயராய்ப் பின்னர் அமைந்தது.

மேலும், கைக்கிளையும் பெருந்திணையும் ஒழுக்கத்தால் பெயர் பெற்றவையே என்று முன் கட்டுரையில் கண்டோம். இவ்வாறு ஒழுக்கத்தால் ஏழு அகத்திணைகளும்

காரணப் பெயர் பெற்றன என்பது தெளிவு. இனிப் புறத்திணைகள் பெயர் பெற்றவாறு பின்னர்க் காண்போம்.

முதற் பொருளினும் கருப்பொருளினும் செய்யுளிலே உரிப்பொருள் முறையே சிறப்புடையது. ஏனெனில் உரிப்பொருளின்றி அகப்பொருள் செய்யுள் அமைவதில்லை. எனவே நிலமுதல் பொருளடியாக, அல்லது பூக்கருப் பொருளடியாகத் திணைப்பெயர் பெறுவதைக் காட்டிலும், உரிப்பொருளினடியாகத் திணைப்பெயர் பெறுவதே ஏற்ற முடைமையும் ஏற்ப அமைவதுமாகும். இதனைத் தொல் காப்பியரே 'திணைக்குரிப்பொருளே' (அகத். 14) என்ற தொடரால் வற்புறுத்தியுள்ளார்.

இதுகாறும் விளக்கிய பொருட் சுருக்கம் வருமாறு:—

1. குறிஞ்சி, நெய்தல் முதலியன தொழிற் பெயர்கள், அவைகள் ஒழுக்கம் குறித்தன.

2. குறுகுதல் குறிஞ்சி, மருவுதல் மருதம், முல்லுதல் முல்லை. பற்றுதல் பாலை, நெய்வது நெய்தல்.

3. இயற்கையாய் எழுச்சியாய் எழும் காதற் செயல் முந்தியது. அதைக் குறிக்க அமைத்த அடையாளப்பூ பிந்தியது.

4. அகத்திணையின் ஏழு பெயர்களும் காரணத்தால் பெயர் பெற்றன. புறத்திணைப்பெயரைப்பின்னர் ஆய்வோம்.

5, திணைப் பெயர்கள் முதல், கருப்பொருளால் பெயர் பெறுவதிலும் உரிப்பொருளால் பெயர் பெறுவதே ஏற்றது.

எனவே, குறிஞ்சி முதலிய ஒழுக்கத்தின் பெயர்கள் குறிஞ்சி முதலிய நிலங்கட்கு ஆகியன என்று கொள்ளலே சிறப்புடையது. நிலப்பெயர், மலர்ப்பெயர், ஒழுக்கத்திற் காகியன எனக்காட்டுவதற்கு ஒரு சில காரணங்கள் மட்டும் உளவேனும், அவ்வாறு முடிவுகொள்ளுதல் சிறப்பாகாது.

நக்கீரர் காட்டிய நற்கருத்தே நாளும் நன்கு வளர்க. "முல்லை என்ற சொற்குப் பொருள் இருத்தலாயிற்று" என்று நச்சினார்கினியர் (அகத். 5 பா–உரை) கூறியது என்னைத் தூண்டியதால், யான் திணைச் சொற்களுக்குப் பொருள்காண முயன்றேன். இப்பொருள் பொருந்தா விடில், வேர்ச்சொல் ஆராய்ச்சி அறிஞர் அறிந்து உரைப் பின் தமிழிலக்கணக் கருத்து வளரும். இளம்பூரணர் கண்ட கருத்தினும் நக்கீரரும் நச்சினார்க்கினியரும் கொண்ட கருத்தே சீரியது என்பதை விளக்குவதே இக்கட்டுரை,

# த ண் ட னை !

(புலவர். வித்துவான் மு. உலகநாதன்)

[சேரன் செங்குட்டுவன் தன்தேவி இளங்கோவேண்மாளுடன் இலவந்திப் பள்ளி வெள்ளிமாடம் விட்டுவந்து மலைவளம்கண்டு மகிழ்ந்து நிற்றல்]

செங்குட்டுவன் : வேண்மாள்! வேண்மாள்! விரைந்தே வா! வா!
ஆண்களி றொன்றை அங்கே பார்! பார்!
தண்சுனை நீரைத் தன்பிடி உண்ண
எண்ணிடும் களிறே எவ்விதம் துதிக்கையை
உண்ணுதல் போன்றும் உறிஞ்சுதல் போன்றும்
பண்ணிடும் பொய்ச்செயல் பார்! பார்! அருமை
பகுத்தறி வற்ற மிருகத் தொகுதியும்
பகுத்தறி வுள்ளார் செயலினும் பலவாய்
ஒன்றன் அன்பை ஒன்றன் இடத்தே
பொன்னும் ஒளியும் பொருந்துதல் போல
செலுத்தும் பாங்கினைத் தேவிநீ காண்பாய்

வேண்மாள் : மன்னர் மன்னு! மனங்கவர் கண்ணு!
என்னிடம் நீங்கள் இருக்கும் அன்பினும்
ஈங்கிது பெரிதல! எனினும் காட்டிடை
வேங்கையும் களிறும் வேறுள மிருகமும்
தங்களைப் போன்றே தன்பிணை யோடு
திங்களும் வானுஞ் சேர்ந்தது போன்று
உயிர்த்திடும் என்றால் உம்செயல் கண்ட
நயம்தான் போலும்! நன்று நன்றே!

சேரன் : போதும் வேண்மாள்! போதும் புகழ்ச்சி!
மாதே! அங்கே...!

வேண்மாள் : யாரோ பலர்நமை
நோக்கி வருகிறார், நோக்கம் என்னவோ?
ஆக்கம் நிலத்திடை அரிதெனை வரிதனை
நீக்கம் செய்கென நும்மை அண்டியே
போக்கெம் குறையினை எனும்முறை போலுள!

சேரன் ; ஊஉ! கூஉம்! நாடிது உழவர் நாடே!
ஏதுஉம் அவர்கட் கிங்கெதும் வரிப்பளு
இலை! இலை! அதனால் இங்கவர் வருகை
குலைப்பசி வருத்தும் கொடுமையால் அல்ல!
என்னையும் உன்னையும் இங்கவர் கண்டசால்
அன்பினால் காணவே அவரிங் கணுகுவார்.

வேண் : ஓஒ! கோ!

வேடுவன் : நாட்டின் முதலே! உயிரே!
ஆ! கா! பிறவிப் பயனை இன்றே அடைந்தனம்!

மலைவளம் காண மன்னவா வந்தனை
தலைவ! நும் வருகையால் தகுதியாம் பெற்றோம்!

வேடுவன் 2 : கண்டியாம் அதனால் காவல!இம் மலையுள
பண்படு பொருளினை படைத்து நும் அடிதொழ
வந்துளோம் மன்னவா...!

சேரன் : வாழ்க! வாழ்க!
செந்தமிழ்ச் சேரரே! தண்டமிழ் இனிமையால்
என்னிடம் கொண்ட அன்பினால் உங்களை
என்சொலி அழைப்பேன்? என்சொலிப் புகழ்வேன்?
ஏதென் தோழரே?

வேடுவன் 1 : இதுவா அரசே!
"கோதிலாக் கமுகின் செழுங்குலைத் தாரிது!
பெருங்குலை வாழையின் இருங்கனித் தாரிது!
தெங்கின் பழமிது! தேமாங் கனியிது!
பைங்கொடிப் படலையும் பலவின் பழமிது!"
தின்னத் தெவிட்டாத் தேனிது மன்னவா!

சேரன் : நன்று! நன்று! நல்லது மக்களே!
இம்!இது! என்ன?

வேடுவன் 2 : இவைகளா அரசே?
"யானைவெண் கோடும் அகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியும் மதுவின் குடங்களும்
சந்தனக் கட்டியும் சிந்தூரக் கட்டியும்
அஞ்சனத் திரளும் அணிஅரி தாரமும்
ஏல வல்லியும் இருங்கறி வல்லியும்
கூவை நூறும் கொழுங்கொடிக் கவலையும்"
கொண்டு வந்துளோம் கொடுப்பதற் கென்றே!
தண்டமிழ் வேந்தே தகவுடன் கொள்வீர்.

வேண்மாள் : சரி! சரி! மக்காள்! தலையும் வாலும்
பருத்த உருவமும் கொண்டது யாதிதோ?

வேடுவன் 3 : அன்னாய்! இதுதான் "அரியின் குருளை.
மன்னவர் வீட்டில் மகிழ்வுடன் வாழும்
சொன்னதைச் சொல்லும் தேன்மொழிக் கிளியிது!
கன்னியர்க் குவமக் கான மயிலிது!
குரங்கின் குட்டி குடாவடி உளியம்
வரையாடு வருடை, மடமான் மறியும்"
இத்தனை பொருளும் இங்குமக் காக
அத்தனை பொருளையும் அடியவர் தந்தோம்

வேடுவன் 1 : இன்னொரு சேதியும் இங்குமக் குரைப்போம்.

சேரன் : அஃதென் தோழரே!

வேடுவன் 2 : அதுவா மன்னவா!
நேற்று முன் தினம் நின்மலை இதனை
ஆற்றாத் துயரொடு அலையும் மனத்தளாய்
காரிகை ஒருத்தி அண்டினள் கண்டோம்!
காரிகை அவளும் கானவேங் கையின்கீழ்
நின்றனள் வணங்கி நெடுவான் பார்த்தனள்.
என்னிது புதுமை? இமையவர் வந்தே
அன்னவள் தன்னை அணிமலர் விமானம்
தன்னில் ஏற்றித் தம்முடன் கொண்டனர்.
"எந்நாட் டாள்கொல்? யார்மகள் கொல்லோ?
நின்நாட்டி யாங்கள் நினைப்பினும் அறியோம்!"

சேரன் : புதுமை! புதுமை! (பின், புலவர் சாத்தனாரை நோக்க)

சாத்தனார் : புதுமைதான் சேரா!
அதுவோர் பெருங்கதை!

சேரன் : (வியப்புடன்) கதையா? அதுஎன்?

சாத்தனார் : கண்ணகி என்னும் கற்புடைச் சோழப்
பெண்மகள் கணவனைப் பிரிந்த துயரினால்
நீதி கேட்டு நெடுவேற் பாண்டியன்
கோதையும் இறக்கக் கொற்றவன் தானும்
தேரா மன்னனாய்ச் செய்த பிழையினை
ஓரா நின்றே உணர்ந்தபின் வருந்தி
"பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ? அரசன்? யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதல் பிழைத்தது கெடுகஎன் ஆயுளென"
மன்னவன் மயங்கி மண்ணில் வீழ்ந்து
தன் திற நீதியைத் தரணியில் நாட்டினான்.
அன்றவை தன்னில் ஆர்த்த அணங்கே
இன்றுன் நாட்டில் இம்மலை யடைந்து
"கொற்ற வேந்தன் கொடுங்கோல் தன்மை
இற்றெனக் காட்டி எடுத்துரைக் குரைப்பளாய்
தன்நாட் டாங்கண் தனிமையில் செல்லாது
நின்நிலம் அடைந்தாள் நங்கையப் பெண்ணே!

(தொடரும்)

# இருவேறு உலகத்தியற்கை.

புலவர் வெ. சி. சீனிவாசன்
(தமிழ் விரிவுரையாளர் செந்தமிழ்க்கல்லூரி, மதுரை,)

தமிழர் அறிவாளிகள், சிந்தனையாளர்கள், எண்ணியே கருமம் செய்வார்கள். அவர் கொள்கைகள் விரிந்த தன்மையுடையன, பரந்த நோக்கங் கொண்டன. சமுதாயம் முழுவதும் வாழவேண்டும், அனைவர் வாழ்விலும் இன்பம் பொங்க வேண்டும் என்பது அவர் விருப்பம். 'செல்வத்துப் பயனே ஈதல்'' என்ற ஒரு வரி எவ்வளவு சிறந்த கொள்கையை நமக்கு அறிவிக்கிறது! செல்வம் அனைவர்க்கும் உரியதன்றோ? அனைவரும் உண்டு மகிழச் செய்வதே அதன் பயன் அல்லவோ? எனவே ''துய்ப்பேம் எனினே தப்புநபலவே'' என முரசறைந்து அறிவித்தனர். இவ்வாறு ஈராயிரம் ஆண்டுகட்குமுன் அறஞ் சொன்னார்கள் என்றால் தமிழர் வாழ்வு அன்றே எத்துணை அறமும் அறிவும் மிக்கதாக மிளிர்ந்தது?

தமிழறிஞர்களில் தலைசிறந்தவர் வள்ளுவர். எப்பாலவர்க்கும் பொருந்தும் நல்வழி காட்டியவர் அவரொருவரே. எந்நாட்டவர்க்கும் பொதுவான நீதிகளை உரைத்ததனால் மட்டும் அவர் புகழ் விளங்கவில்லை. எவ்வினத்தவர்க்கும் பொருந்தும் அறங்களைக் கூறியதனாலேயே நாம் அவரைப் போற்றவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாகச் சமுதாயம் முழுமைக்கும் அவர் நீதி சொன்னார்; வழி வகுத்தார். ஒவ்வொரு துறையிலிருப்பவரும் நடக்கவேண்டிய பாதையை அமைத்துத் தந்தார். ஆகையாலேயே அவரை மேலாகப் போற்றுகிறோம்.

அரசனும் ஆண்டியும் என்னென்ன கொள்கைகளைக் கடைப்பிடித்தால் நாட்டில் ஒற்றுமை நிலவும்? செல்வரும் ஏழையும் என்னென்ன செய்தால் சமுதாயம் செழிப்போடு வாழும்? மறவர்க்கும் மற்றவர்க்கும் உரிய கடமைகள் எவையெவை? ஆகியவற்றை எல்லாம் வள்ளுவர்

தெளிவாக எடுத்துச் சொல்லிச் சமுதாயத்தை ஒழுங்கு படுத்தினார். செல்வன் இரக்கமின்றி வாழ்ந்தால், உழைக்கும் ஏழை வறுமையில் வாடினால், நல்ல மக்கள் நோயில் நைந்தால் அங்கு அமைதியா நிலவும்? களவும், கலகமுமே நிறையும். இதை ஆராய்ந்தவர் வள்ளுவர். "ஈதலும், இசைபட வாழ்தலுமே" செல்வர் செல்லவேண்டிய நெறி என வகுத்தார்,

ஆனால், செல்வர்க்கும் செல்வாக்குப் படைத்தவர்க்குமே கொடுத்து அறத்தை ஆரவாரமாகச் செய்தனர் பலர். அரசனுக்கும் அதிகாரிகட்கும் அளித்து அதிகார உறவு பெற்றனர் சிலர். ஏழைகள் கூழில்லா மோழைகளாகவே இருந்தனர். இதனை எண்ணிப் பார்த்த முதற் பாவலர் 'வறியவர்க்குக் கொடுப்பதே ஈகை; மற்றையவை வாணிபச் செய்கைகளாகும்' என்றார். 'செல்வத்தைக் கொடுத்து வாழ்வோரை மருந்துமரம் என்றும் கொடுக்காது பூட்டி வாழ்வோரை நச்சு மரம்' என்றும் உவமையால் விளக்கினார் வள்ளுவர். வறுமை நீங்கவும், அறம் வளரவுங் கொடு; முடிந்தமட்டும் கொடு, என்றெல்லாஞ் செல்வர்க்குஅறம் உரைத்தார் வள்ளுவர்

கொடுக்க இயலாத சமயம் வந்தால்! அவரே கேள்விக் குறியை அமைத்தார். 'துன்பத்தின் சிகரம் சாவே; இன்பம் நிறைந்தது என்று எண்ணி அதைத் தழுவிக் கொள்' இம்மணிமொழியே அவ்வினாவிற்கு அவர் தந்த விடை. 'கொடுக்கமுடியாவிடினும் குமைந்து சாவதே சரி' எத்துணை உணர்ச்சிமிக்க மானங்காக்கும் வாக்கு! வள்ளுவர் வடித்த இச்சொற்கள் ஒருவர் வாழ்வில் நனவாயின. வள்ளல் குமணனை அறியாதார் இவ்வளமிகு நாட்டிலில்லை. காட்டிலே வந்து கேட்ட புலவர்க்குத் தன் தலையைக் காட்டவில்லையா அத்தியாகத்தின் நிலையம்.

வள்ளுவர் வறுமையைக் கண்டு கண்ணீரும் செந்நீருஞ் சிந்தினார். இருப்பினும் உழைத்து வாழ்வதே மானமுள்ளவழி எனச்சொல்லி வைத்தார். உழைத்து

உரிமையோடு வாழ்வோரையே அவர் வாழ்த்துகிறார். உழைத்தாலும் வாழ்க்கை வறுமையின்றி வளர்கிறதா? நோய் நொடி வந்தபோது மாய்ந்து மடிவதைத் தவிர வேறுவழி என்ன உண்டு? எல்லோராலும் உழைக்க இயலுமா? நொண்டியும் முடமும் நாட்டில் மண்டிக் கிடக்கின்றனரே! அவர்கள் பிறர் காலைப்பிடிக்காது பிழைக்க இயலுமா? பிச்சை எடுப்பதைத்தவிர பிழைப்புவேறு அவர்க்கு இல்லையல்லவா? எனவே பிச்சை எடுக்கும் வழியையும் அவர் அடைத்து வைக்கவில்லை; "இரக்க இரத்தக்கார்க்காணின்" என்றார்.

எனவே அவர் செல்வரைப் பார்த்துத் தாராளமாகத் தாருங்கள்; தந்தால் உங்கட்குப் புகழும் பெயரும் வளரும் என்றார்; ஏழைகளைப் பார்த்து, உழைத்து உரிமையோடு வாழுங்கள் என்றார். ஆனால் எல்லோருமா நெஞ்சுவந்து அள்ளி அளிக்கின்றனர்? செல்வம் செல்வம் என்று இரவு பகலாக உச்சரிப்பவர் சேர்த்து வைக்க ஆசைப்படமாட்டாரா? சேர்த்தவர் சீமான் ஆவதையும், கொடுத்தவர் கோவணாண்டி ஆவதையும் பார்த்தால் செல்வர் மனங் கல்லாகுமா? கரைந்துருகுமா? ஆகவே இல்லை என்று சொல்வோரை அவர் எங்குங் காண்கிறார்.

இரப்போரெல்லாம் இரை கிடைக்காமையால் இரந்து கொண்டிருப்பதையும் நாள்தோறும் காண்கிறார் அவர்; அவ்வாறு காணும்போது உள்ளம் உருகுகிறார்; ஆனால் கரப்பாரைக் காணும்போது உருகி உருக்குலைந்த உள்ளம் உடைந்து சுக்கு நூறாகக் காண்கிறார். இஃது உலகின் விதியா? அல்லது சமுதாயத்தின் சதியா? அவர் செம்மையான உள்ளத்தில் இனத்தீ எழுகிறது. பணக்காரர் வன் கணாளரே எனச் சாடுகிறார். "பிச்சை எடுக்குமாறு இறைவன் படைத்திருந்தால்..." இறைவனையும் சபிக்க முயல்கிறார்; "அவனும் பஞ்சைப் பராரையாகச் சுற்றியலைந்து சாகட்டுமே" அவர் சாபம் மிகக்கடுமையானதுதான்.

பின் சிறிது அமைதிகொள்கிறார். அவர் பேரறிவு மேலும் முன்னேறுகிறது. கொடுக்காதவர் குபேரர் ஆகின்றனர். குபேரர் கோடீசுவரர் ஆகிறார்கள். அவர்கள் நட்ட கொடியே வானளாவப் பறக்கிறது. அவர் கொடியிலே கறையிருந்தாலும், அதன் அதிகாரங்கண்டு அனைவரும் அடங்குகின்றனர். அவர்கள் செல்வமும் செல்வாக்கும்

சீர் பெறுகிறதேயொழிய, சிறுமை அடைவதில்லை. தந்திர மும் தருக்கும் உள்ளவர் பலர் அவர்க்குத் துணையாக நின்று அவர்களது பொருளையும் போகத்தையும் வளர்க் கின்றனர். இந்நானிலத்தின் ஆணை எல்லாம் அவர்கள் காலடியிலே; நல்லோரும், நலிவுற்ற மக்களும் அவர்கள் பிடித்தால் கற்றை, விட்டால் கூளம் ஆகின்றனர். அவர்கள் எண்ணியதே கொள்கை, சொன்னதே ஆணை ஆகின்றன.

இரக்கத்தால் கொடுத்தவர் செல்வ நிலையில் இறங்கிக் கொண்டே வருகின்றனர்; செல்வம் பெருகும் நிலைபோய் குறுகும்நிலை பெறுகின்றனர். ஆனால் அவர் செயலால் மொழியுங் கலையும் வளர்கின்றன. குடிமக்கள் வாடாது வதையாது வாழ்கிறார்கள்; வாழ்ந்த மக்கள் அவர்களை வாழ்த்துகிறார்கள். அவர் பெயரும் புகழும் பாரெல்லாம் பரவுகின்றன: பெருகுகின்றன. மக்கள் உள்ளங்களில் தெய்வங்களாக அவர்கள் நிலைபெறுகின்றனர்.

செல்வ ஆசையால் சீர்மையான பண்பை இழக்கின்ற னர் செல்வர். அவர்கள் இரக்கமற்றவர் ஆக ஆகத்தான் செல்வம் மலைபோலக் குவிகிறது. பணமா? பண்பா? என்ற நிலை எழும்போது பணம் கொண்டு பண்பைப் பறக்க விடுகின்றனர். சுகமா? சோகமா? என்ற வினா பிறக்கும் போது சுகத்தைக்கொண்டு சோகம் செய்ய முற்படுகின் றனர். திரு சேர்க்கும் நெறியில் சென்றால் இம்மறுவெல் லாம் இயற்கையாக வருகின்றன.

நல்லமனம் படைத்தோர் கலையை நாடுகின்றனர். கலை கல்வியைத் தருகிறது. கல்வி அறிவையும், அறிவு ஒழுக்கத்தையும் உண்டாக்குகின்றன. இத்தெளிவு பெற் றோர் மொழியை வளர்க்கின்றனர். மொழி நல்லதோர் வழி காட்டுகிறது. நல்ல வழியில் செல்வதால் அறிவு வளர்கிறது; அவர் தெள்ளியோர் ஆகின்றனர்.

எனவே நாம் விரும்பினாலும், விரும்பாவிடினும் இரு வேறிடங்கட்குச் செல்லும் இருவழிகள் உள்ளன. இரு வேறியற்கை நெறிகள் இவ்வுலகில் உள்ளன. வள்ளுவர் தமது ஆய்வின் முடிவில் இவ்வியல்பைக் காண்கிறார். இவ்வுலகின் விதியோ இது? அன்றி இயற்கையின் நிய தியோ? இதைத்தான் ஊழென உரைப்பரோ? அவர் ஊழ் என்ற அதிகாரத்தில் இம்முடிவைத் தெரிவிக்கிறார்.

(தொடரும்)

# நும் — நீயிர்

ஆ. சிவலிங்கனார்,

தமிழ்விரிவுரையாளர், சி. பா. சு. தமிழ்க்கல்லூரி, மயிலம்.

அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை
உக்கெட நின்ற மெய்வயின் ஈவர
இஇடை நிலைஇ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
அப்பால் மொழிவயின் இயற்கை யாகும் [தொல். எழு. 327]

இத் தொல்காப்பிய நூற்பா, 'நும்' என்ற சொல் 'நீயிர்' எனத் திரிந்த முறையை விரிக்கின்றது, 'நும்' என்பது, நும்-நீம்-நீஇம்-நீஇ-நீஇர் (நீயிர்) என முறையே திரிந்ததாக முதல் நான்கு வரிகளும் கூறும். இதனால் 'நும் என்பதன் திரிபு 'நீயிர்' என்பதாம்' என்பது ஆசிரியர் தொல்காப்பியர் கருத்து என்பது புலப்படும், இக்கருத்து மொழிநூலார் ஒப்புக்கொள்ளுதற்குரியதன்று.

"தன்மை, முன்னிலை, படர்க்கையாகிய மூவிடங்களில் வரும் பெயர்கள் வேற்றுமை யுருபுகளை ஏற்கும்போது திரிந்தே வரும். யான், யாம் என்ற தன்மை யொருமைப் பன்மைப் பெயர்கள் வேற்றுமையுருபேற்கும் போது,'என்,' 'எம்' எனத்திரிந்தும், 'தான்' 'தாம்' என்ற படர்க்கைப் பெயர்கள் தன், தம் எனத் திரிந்தும் வரும். முன்னிலையிலும் ஒருமையில் 'நீ' என்பது 'நின்' எனத் திரிந்துவரும். ஆனால் முன்னிலைப் பன்மையில் மட்டும் வேற்றுமையுருபு ஏற்கக்கூடிய 'நும்' என்ற பன்மைப் பெயர் 'நீயிர்' எனத் திரியும் என்பது பொருந்துவதில்லை,"

இவ்வாறு வாதிப்பர் மொழிநூலார். மேல்நூற்பாவில் கூறியிருப்பது தமிழ்இயல்புக்கும் உத்திக்கும் பொருந்தாது என்பர் பாவாணர் அவர்கள். தொல்காப்பியர் கூற்றுப் பொருந்துவதன்று என்பதில் யாதோர் ஐயமுமில்லை, ஆனால்

அவர் ஏன் அவ்வாறு பொருந்தாக் கூற்றைக் கூறினர் என்பதே நாம் காணவேண்டுவது. இதற்கு விடை 'திராவிட மொழியின் மூவிடப் பெயர்' என்ற ஆராய்ச்சி நூலில் ஆசிரியர், பன்மொழிப்புலவர் வேங்கடராசலு ரெட்டியார் அவர்கள் கூறியதையே கூறலாம், தொல்காப்பியர் 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கூறினரே யல்லாமல் உண்மைத் தன்மையைக் கூறினரிலர்' என்பது அவர்கள் கூற்று. (பக். 61)

தொல்காப்பியர் காலத்தில் முன்னிலை யொருமைச் சொல்லாக நீ என்பதும் பன்மைச் சொல்லாக நீயிர் என்பதும் இருந்தன. இவற்றுள் வேற்றுமை யுருபேற்கும் தகுதியில் நின் என்பதும் நும் என்பதும் இருந்தன. இவற்றுள் நீ என்பதன் திரிபாக நின் என்பதைக் கொண்டு,

"நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் னகரம் ஒற்று கும்மே" (தொல், எழு.)

என்றார். அவ்வாறே 'நீயிர்' என்பதன் திரிபு 'நும்' எனக் கொண்டு இலக்கணம் அமைத்தல் வேண்டும். அதற்கு மாருக 'நும்' என்பதன் திரிபே 'நீயிர்' என இலக்கணம் அமைத்தார். ஓரிடத்து மட்டுமன்றி நீயிர் என்பதை "நும்மின் திரிபெயர்" என்று பிறிதோரிடத்தும் (சொல். 143) கூறியுள்ளார். இவ்வாறு மாற்றிக் கூறியதால் ஒரு பயன் உண்டென்று டாக்டர் P. S. சுப்பிரமணிய சாத்திரியார் அவர்கள் கூறினர்கள்,

"பெயரியலில் " நீயிர் நீயென வரூஉங்கிளவி" (சொல். 188) என்றவிடத்து நீயிர் என்ற சொல்லைப் படித்திருக்கின்றமையான், அதனை நும்மின் திரிபெயர் (சொல். 143) என்று கூறினமையானும், இச்சூத்திரத்தை (அல்லதன் மருங்கின் என்பதை)ப் படித்தமையானும் யாது பயன் எனின், வேற்றுமை யுருபேற்ற 'நும்மை, 'நும்மான்' முதலிய சொற்கள் முதல் வேற்றுமையாகிய 'நீயிர்' என்ற சொல்லின் முன்

னரே வழக்கில் இருந்தன என அறிவித்தற்கு என்னலாம்" (தொல்காப்பிய எழுத்ததிகாரக் குறிப்பு பக். 278) இவ்வாறு கூறிய கூற்றும் ஓரளவில் பொருந்துவதாகும்.

'நீயிர்' என்ற சொல் இல்லாமல் 'நும்' என்ற சொல் வருதற்கில்லை. முதலில் எழுவாய் நிலையில் இருந்த சொல்லே (திரிபில் பெயரே) பின்னர்த் திரிந்து வேற்றுமையுருபேற் கும். எனவே இயற்சொல் இன்றித் திரிந்தசொல் அமைந் தது என்றல் பொருத்தமில்லை. நீயிர் என்பதன் திரிபாக நும் இல்லை யென்றாலும் வேறொன்றன் திரிபாகவேனும் இருத்தல் வேண்டும். அச்சொல் யாது? திராவிட மொழி யின் மூவிடப் பெயர் என்ற நூலின் ஆசிரியர் கூற்றுப்படி அச்சொல் நீம் என்பதாகலாம். அது தொல்காப்பியர்காலத் திலேயே வழக்கிறந்தது.

தொல்காப்பியர் வழக்கிறந்த சொற்களுக்கும் வழக் குள்ள சொற்களுக்கும் தொடர்பு காட்டவந்தவரல்லர்; வழக்குள்ள சொற்களுக்கு மட்டும் தொடர்புபடுத்திக்காட்ட வந்தவர். அதனால் அவர் கூற்றுக்கள் மொழியாராய்ச்சிக் கொள்கைகளுக்கு ஒத்தும், சிறுபான்மை ஒவ்வாதும் அமையலாம். அம்முறையில் ஒவ்வாமல் அமைந்ததே 'நும்' என்பதன் திரிபு 'நீயிர்' என்றதும் ஆம்; என்றாலும் நீயிர் என்பதன் திரிபே நும் என்பது என்ற கொள்கையுடையவ ரல்லர் தொல்காப்பியர் என்று கூறிவிடமுடியாது.

புள்ளி மயங்கியலில் மகரவீற்றுச்சொற்களின் முன்னர் வல்லின முதல்மொழி வந்தால் மகரம் எவ்வாறும் என்பதைக் கூறிவந்தபோது 'நும்' என்ற சொல்பற்றிக் கூறவந்தார். "நும் என்பதன்முன் (உதாரணமாகக்) 'கை' என்பது வரின் வேற்றுமைப் புணர்ச்சியாதலின் மகர ஒற்றுக்கெட வரு மொழிக் ககரத்துக்கினமான ஙகரம் மிகுந்து நுங்கை என் றும்" என்பது இதன் பொருள். (தொடரும்)

# உலகச் சமயங்கள்

(கி. பழநியப்பன், மதுரை)

**6. இசுலாம் சமயம்:** (283–ஆம் பக்கத் தொடர்ச்சி)

யூதர்குலத்தின் தந்தையாகிய ஆபிரகாமிற்குச் சாரா, ஆக்கர் என இருமனைவிகள் இருந்தனர். சாராவின்மகனுக்கு ஐசக் என்றும், ஆக்கரின் மகனுக்கு இசுமாயில் என்றும் பெயர். ஆபிரகாம் சாராவினிடத்திலேயே அதிக அன்பைக் காட்டி வந்தான். அதைச் சாரா தன்னுடைய மகனின் வாழ்விற்கு நன்றாகப் பயன்படுத்திக் கொண்டாள்.

சாரா தன் கணவன் ஆபிரகாமிடம் இரண்டு வரங்கள் கேட்டாள்; ஒன்று தன் மகன் ஐசக்கே ஆபிரகாமினுடைய உடைமைகளுக்கு அடுத்த வாரிசாக வேண்டுமென்பது, மற்றொன்று ஆக்கரையும் அவள் மகன் இசுமாயிலையும் ஊரிலிருந்து வெளியேற்றி விடவேண்டுமென்பது. ஆபிரகாம் சாராதாவின் மேலுள்ள பற்றுதலின் காரணமாக அவ்விரண்டு வேண்டுகோட்களையும் ஏற்று நிறைவேற்றுவதாக வாக்குறுதி கொடுத்தான். அவ்வாறே மறுநாள் காலை ஆக்கரும் இசுமாயிலும் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

அப்பொழுது சிறு குழந்தையாகவிருந்த இசுமாயிலை ஆக்கர் தூக்கிக்கொண்டு திக்கற்ற பாலைவனத்தின் வழியாகச் சென்றாள். எங்குச்செல்வது, என்ன செய்வது என்பதை அறியாது கால் சென்ற வழியில் நடந்து கொண்டிருந்தாள். நேரம் ஆக ஆகக் களைப்பு அதிகரித்தது. கால்கள் பின்னின, வெயிலின் கொடுமை தாங்க முடியாது சோர்வுற்றாள். நாவறண்டது. தண்ணீர்வேட்கைமிகுந்தது. நிற்பதற்குக்கூட சிறு நிழல் கிடையாத அப்பாலைவனத்தில் தண்ணீர் எங்கு கிடைக்கும்? இனி நடக்கவும்முடியாது தண்ணீர் குடிக்காது உயிர்வாழவும் முடியாது என்றநிலையில் ஒரு பாறையில் உட்கார்ந்து தனக்கும் தன் மகனுக்கும் இவ்வாறு முடிவு வந்து

விட்டதே என்று வருந்தி அழுது கொண்டிருந்தாள். இசு மாயில் சிறுவனாக இருந்தாலும் தாயின் திக்கற்ற நிலையைக் கண்டு மிக்க சினங்கொண்டு தரையைக் காலால் ஓங்கி உதைத்தான். அவன் தன் சினத்தைத் தணிப்பதற்கு வேறு என்ன செய்யமுடியும்? இசுமாயில் உதைத்த இடத்தில் திடீ ரென்று பூமியைப் பிளந்து கொண்டு ஒரு நீரூற்றுக் கிளம் பியது. தாயும் மகனும் உயிர் பிழைத்தனர்,

இச்செய்தி ஆப்பிரகாம் காதுகளுக்கு எட்டியதும் அவன் விரைந்து வந்து அவ்விடத்தை ஒரு புனிதமான இட மாகக் கருதி அங்கு ஒரு கோவில் எழுப்பினான். அக் கோவி லில் தம் பரம்பரையைச் சார்ந்த ஆதிமனிதனாகிய ஆதம் வைத்திருந்த ஒரு கருங்கல்லை வைத்தான். அக்கோவிலுக்குக் **காபா** எனப் பெயரிட்டான். இசுமாயில் கண்ட நீரூற்றிற்குச் **சம்சம்** எனப் பெயரிடப்பட்டது. ஆக்கரும் இசுமாயிலும் அவ்விடத்திலேயே தங்கினர். நாளடைவில் அவர்கள் குடும் பம் வளர்ந்தது, தலைமுறை தலைமுறையாக வளர்ந்து வந்த அக்குடும்பத்தினர் அனைவரும் காபாவைச் சுற்றியே வீடுகள் அமைத்துக்கொண்டு வாழ்ந்து வந்தனர். அது ஒரு பெரிய ஊராக வளர்ந்தது. அப்புனிதமான இடத்தில் அவ்வாறு அமைந்த ஊரே மெக்கா என வழங்கப்படுவதாகும். மெக்கா நகரம் தோன்றிய விதத்தைப் பற்றி மற்றொரு கதையும் வழங்குகின்றது. வானுலகில் ஒரு காபா இருந்ததாகவும், ஆதம் செய்யக் கூடாததைச் செய்ததன் காரணமாக வானு லகிலிருந்து வெளியேற்றப் பட்டபொழுது, மண்ணுலகில் வானுலகக் காபாவைப்போல் ஒரு கோவிலை அவன் அமைத் தான் என்பதே அக்கதையாகும்.

இசுமாயிலின் பரம்பரை வளர வளர மெக்கா நகரமும் பெரிதாகியது. பலர் அங்கிருந்து வெகுதூரம் சென்றும் குடியேறி வாழ்ந்தனர். ஆனால் எங்கிருந்தாலும் மெக்கா விற்கு வந்து காபாவில் வணங்கி அங்குள்ள கருங்கல்லை

முத்தமிட்டுச்சம்சம்நீரைக்குடிப்பதைக்கடமையாகக்கொண்டிருந்தனர். அவர்களே அராபிய மக்கள் என்று வழங்கப்பட்டனர்.

அராபிய மக்களும் அக்காலப் பிற மக்களைப் போலவே இயற்கையை வழிபட்டு வந்தனர். ஞாயிற்றையும் திங்களையும் விண்மீன்களையும் வழிபட்டதுடன் தங்கள் இனத்தின் தந்தையாகிய ஆப்பிரகாமையும் இசுமாயிலையும் நினைந்து வழிபட்டனர். இயற்கை வழிபாடு சிறிதுசிறிதாக உருவவழிபாடாக மாறியது. மெக்காவிலுள்ள காபாவில் உருவங்களை வைக்கத் தொடங்கினர். அராபியர் ஆண்டிற்கு 360 நாட்களே உண்டு. ஆகவே நாள் ஒன்றுக்கு ஓர் உருவமாக 360 உருவங்களை வைத்துத் தெய்வங்களாக வணங்கினர். இத்தெய்வங்களுக்கெல்லாம் மேலாக 'அல்லா தாலா' என ஓர் ஆண்டவன் உண்டு என்றும் அவர்கள் நம்பினர். அராபியர்கள் அனைவரும் இசுமாயிலின் வழித்தோன்றல்களே ஆயினும் அவர்கள் பல சிறுசிறு பிரிவுகளாகப் பிரிந்து கூட்டங்கூட்டமாக வாழ்ந்தனர். ஒரு கூட்டத்தினருக்கும் மற்றொரு கூட்டத்தினருக்கும் அடிக்கடிச் சண்டை சச்சரவுகள் நிகழ்வது தினசரி நிகழ்ச்சியாக இருந்தன. அரபியநாடு ஒரு பாலைவனமாக இருந்தபடியால். உலகத்தில் மண்ணாசை பிடித்து அலைந்த பல அரசர்கள் அந்நாட்டின்மேல் படையெடுக்காது சென்றனர். எனினும் வெளிநாட்டார் வந்து செய்யும் குழப்பத்தை விட உள்நாட்டார் குழப்பம் மிக அதிகமாகவே இருந்தது. அதன் பயனாக அறிவு வளர்ச்சித் துறையில் கவனம் செலுத்த இயலாது மூடப்பழக்க வழக்கங்களுக்கு அடிமையாயினர். ஒரு மலைக்கோ அல்லது ஒரு மரத்திற்கோ நோய்களை உடனே குணப்படுத்தும் அபூர்வ சக்தி உண்டு என்று வழிப்போக்கர்கள் சொல்வதைக் கேட்டு அதைநாடி நூற்றுக் கணக்கான மைல்கள் பாலைவனத்தில் சென்று வருவார்கள். எங்குச்சென்று எதை வணங்கினாலும் மெக்காவிலுள்ள காபாவிற்குச் சமயத் தொடர்பிற்கும் போவதை மட்டும் மறக்காது இருந்தனர்.

அராபியர்களுக்கு மெக்கா ஒரு புனித இடமாக விளங்கியதுடன் ஒரு பெரிய சந்தையாகவும் இருந்து வந்தது. அங்கு வருபவர்கள் வாசனைச் சாமான்களைக் கொண்டுவந்து விற்பதும், தங்களுக்குத் தேவையான மற்ற சாமான்களை வாங்கிச் செல்வதும் வழக்கம். இதனால் மிகவும் பயன் அடைந்தவர்கள் மெக்காவில் வாழ்ந்த வணிகர்களேயாவர். ஆகவே நல்வாழ்வு வேண்டின் அராபியமக்கள் திரள்திரளாக மெக்காவிற்கு வரவேண்டுமென்று வணிகர்கள் பல வகையில் மக்களை நம்பும்படிச் செய்து வந்தனர். அவர்களுடைய பேராசை அத்துடன் நிற்காது சம்சம் ஊற்று நீரை பணம் கொடுத்தே தொடவேண்டுமென்று அத்தண்ணீரை விற்பனை செய்யவும் தொடங்கினர். இவ் வடாத செயலைக் கண்ட மக்களுக்குச் சம்சம் நீரின்மேல் இருந்தநம்பிக்கையும் பற்றுதலும் குறையத் தொடங்கின. காபாவிலிருந்த தெய்வங்களின்பாலிருந்த நம்பிக்கையும் குறையலாயிற்று. அதன் பயனாகச் சிறிது சிறிதாகத் தெய்வத்தின் மேலுள்ள நம்பிக்கையே அவர்களுக்குக் குறைந்துவிட்டது. தெய்வநம்பிக்கை குறையவே நன்மை தீமை யென்பதன் வேறுபாடும் அவர்களுக்கு இல்லாது போய்விட்டது. குடிப்பதும், குறிசொல்வதும், சூதாடுவதும்போன்ற தீயபழக்கங்களே அவர்களின் பொழுது போக்காக இருந்து வந்தன.

அந்நாட்டிற்கு வந்த யூதர்களும் கிறித்துவர்களும் அவரவர்கள் மதக் கொள்கைகளை அராபியர்களுக்கு எடுத்துக் கூறினர். ஆனால் அவர்கள் ஒன்றிற்கும் செவிமடுக்காது அவர்கள் சென்ற தீய வழியிலேயே சென்றுகொண்டிருந்தனர்.

# இரங்கற் செய்திகள்

## 1. திரு. சதாசிவப் பண்டாரத்தார் மறைவு

வரலாற்றுப் பேராசிரியர், திரு. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் அண்மையில் நம்மை விட்டு மறைந்தது குறித்துப் பெரிதும் வருந்துகின்றோம். அவர் ஒரு சிறந்த கல்வெட்டாராய்ச்சியாளர்; பாண்டியர் வரலாறு, சோழர் வரலாறு போன்ற நூல்களை எழுதிய பெரியார்; தமிழர்களின் இருண்ட கால நிகழ்ச்சிகளைத் தம் கூரிய நுண்ணறிவால் போக்கி நல்லொளியூட்டியவர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பல ஆண்டுகளாகத் தமிழ்ப்பணி புரிந்து, தமிழுணர்ச்சியூட்டி வந்தவர். இத்தகைய ஒரு சிறந்த பேரறிஞரது மறைவு தமிழகத்திற்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். அன்னாரது மறைவு குறித்து, அவரது உறவினர்கட்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## 2. திரு. மு. இராகவையங்கார் மறைவு

தமிழறிஞர் இராவ்சாகிப். திரு. மு, இராகவையங்கார் அவர்கள் பிப்ரவரி 2–ஆம் நாளன்று காலமான செய்தியைக் கண்டோம். அவர்கள் முதுபெரும்புலவர்களில் ஒருவர்; சிறந்த ஆய்வாளர்; பெருந்தொகை, ஆராய்ச்சித் தொகுதி, தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ஆழ்வார் காலநிலை, சேரன் செங்குட்டுவன், சாசனத்தமிழ்க்கவி சரிதம் ஆகிய சிறந்த நூல்களை இயற்றியவர்; எமது மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் நீண்டகாலமாகத் தமிழ்ப்பணி புரிந்துவந்தவர்; "செந்தமிழின்" பொறுப்பாளராக இருந்து ஆய்வுரைக் கருத்துக்களை வழங்கியவர்; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்; சென்னைப் பல்கலைக் கழகத்தமிழகராதியின் தலைமைப் பண்டிதராக இருந்தவர். இத்தகைய பேரறிஞரது மறைவு குறித்து அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

## I. சங்க வெளியீடு

| | | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் | — | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு | — | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம் பாகம் | — | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) | — | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் | — | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடை வெண்பா | — | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை | — | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ண சரித்திரவிமர்சனம் | — | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (தொகுப்பு) | — | 0 | 4 | 0 |

---

## II. செந்தமிழ் வெளியீடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) | — | 0 | 4 | 0 |
| 2. | கணுநூல் (5) இனியது நாற்பது (உரை) | — | 0 | 8 | 0 |
| 4. | புலவராற்றுப்படை | — | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | — | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 9. | அநுமான விளக்கம் | — | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் | — | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் | — | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | — | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் | — | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா | — | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை | — | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் | — | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | — | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பகமூலமும்உரையும் | — | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா | — | 0 | 8 | 0 |
| 24. | குருமொழி வினா விடை | — | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை | — | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைதிருவிருத்தம் | — | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை | — | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை | — | 0 | 3 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் | — | 0 | 8 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் | — | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் | — | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை | — | 0 | 2 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ் | — | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகை நிகண்டு | — | 0 | 6 | 0 |
| 42. | அகராதி நிகண்டு | — | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடு தூது | — | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை | — | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார் சதகம் | — | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் | — | 0 | 3 | 0 |
| 47. | பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100) | | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் | — | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் | — | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) | — | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள் விளக்க நிகண்டு | — | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் | — | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் | — | 0 | 10 | 0 |
| 57. | மதுரை மும்மணிக்கோவை | — | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் | — | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர் கோயில் உலா | — | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி | — | 0 | 8 | 0 |
| 61. | கலைசைக்கோவை | — | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை | — | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை | — | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை | — | 0 | 12 | 0 |
| 65. | மத்யவியாயோகம் | — | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜநி | — | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் | — | 0 | 8 | 0 |
| 70. | திருச்சிறுபுலியூருலா | — | 0 | 12 | 0 |
| 71. | துணைத்தலைவர் நினைவுமலர் | — | 0 | 10 | 0 |

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகி யிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.
2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

---

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A., Bar-at-law, M. L. C.) அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.